


## கருமையிலும் அழகுண்டு!

*******************************

கருமையிலும் அழகுண்டு என்று அதன்,
அருமையை அழகுற காட்டிய உன்தன்;
பெருமையை என்னவென்று சொல்வேன் - கண்ணா!
கருமையிலும் ..........
பூவிற்கு பூ தாவிப்பறந்திடும்,
கருவண்டுகள் போன்று நீயும்;
பூவையற் கைக்குகைத் தாவிடும்,
உருகண்டு நானும் மனமகிழ்ந்தேன் !
கருமையிலும்.........
கருமுகில் கண்டு தோகை விரிக்கும்,
மயில் கூட்டங்கள் போன்று உன்தன்;
உருவதில் மயங்கிடும் கோபியர்களின்,
ஒயிலாட்டத்தை நானும் காணவேண்டும்!
கருமையிலும்............